1971 டிசம்பர் 15]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கிட்டத்தட்ட 15 கோடி வரும் என்று எதிர்பார்க்கப்பட்டது. அடுத்த முழு ஆண்டுக்கு 20 கோடி வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே 45-46-இல் கிடைத்ததைவிட இப்போது அதிகமாகக் கிடைக்கிறது என்றுதான் பொருள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : 1971-72 இல் 15 கோடி வரும் என்று எதிர்பார்ப்பதாகச் சொன்னார்கள். பத்திரிக்கை மூலமாகக் கிடைத்த தகவல்களில் இருந்து இன்னும் அதிகமாகவே வந்திருக்கும் போலிருக்கிறதே?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆயத்தீர்வை கணக்கில் எடுக்கப்படவில்லை. அவைகளைச் சேர்த்தால் நான் கிட்டத்தட்ட 15 கோடி என்று சொன்னேன். இன்னும் அதிகமாகக் கூட வரலாம்.

Tamil medium students in Colleges

*400 Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state the details of the incentives granted to students taking Tamil medium in Colleges.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பி.ஏ., பி.எஸ்சி., பட்ட வகுப்புகளில் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 180 உதவித் தொகையும் புகுமுக வகுப்பில் தமிழைப் பயிற்று மொழியாகத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் மாணவர்களுக்குப் புத்தகங்கள் வாங்க ஆண்டு ஒன்றுக்கு ரூ. 50 உதவித் தொகையும் வழங்குவதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இந்தத் தொகை போதாது என்கிற கோரிக்கை இந்த அரசுக்கு வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, போதாது என்ற கோரிக்கை வரவில்லை. ஏற்கனவே முழு உதவித் தொகை—ஸ்காலர்ஷிப்—பெற்று வருகிற மாணவர்களுக்கும்கூட இந்தத்தொகை கொடுக்கப்படவேண்டும் என்கிற கோரிக்கைதான் வந்தது அதற்காகக் கிளர்ச்சி செய்தார்கள். எல்லோருக்குமே ரூ. 180 கொடுப்பது என்பது முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இப்படி தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்டு பட்டம்பெறுகிற பட்டதாரிகளுக்கு உரிய முதலிடம் எந்த எந்தத் துறைகளில் எந்தப் பதவிகளுக்கு வழங்கப்படுகின்றன? அந்தப் பட்டதாரிகளுக்கு முதலிடம் தருகின்றவகையில் எல்லாத் துறைகளுக்கும் இதை விரிவுபடுத்தி, தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்டு பட்டம் பெற்றவர்களை அரசாங்கம் ஊக்குவிக்கத் தக்க முயற்சிகள் எடுத்துக்கொள்ளப் படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்களுக்கென்று தனியாகப் பதவிகள் அளிக்கின்ற நிலைமைகள் இல்லை. எந்த எந்தத் துறைகளுக்குத் தமிழ் வேண்டுமென்கிற நிலைமை வருகிறபோது தங்களுடைய திறமைகளைக் காட்டக் கூடியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஏற்கெனவே அவர்கள் தமிழில் படித்திருந்தாலும், ஆங்கிலத்தில் படித்திருந்தாலும் தொழில் நிறுவனத்தில் சேருவதில் எந்தவித வேறுபாடும் காட்டுவது இல்லை. அரசாங்கத்திலும் வேறுபாடு காட்டப்படுவ தில்லை. தமிழ் ஆயத்தம் பெற வேண்டுமென்கிற நிலை இருக்கும் போது, தமிழ் பயிற்சி மூலமாகப் படித்தவர்களுக்கு முதலிடம் தரப்படும்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, பி.ஏ., பி.எஸ்சி., வகுப்புகளில் படிக்கக்கூடிய மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடிய சலுகைகளைப் புகுமுக வகுப்பிலும் சேரக்கூடிய மாணவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புகுமுக வகுப்பில் ஏற்கெனவே சம்பளம் இல்லாத நிலைமை இருக் கிறது. அந்தவகையில்தான் 50 ரூபாய் புத்தகம் வாங்குவதற் காகவும், அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் தரப்படுகிறது.

திரு. கா. காளிமுத்து : தலைவர் அவர்களே, சில கல்லூரிகளில் தமிழ் பயிற்சிமொழி மாணவர்களுக்குப் புத்தகம் வாங்கு வதற்காகக் கொடுக்கப்படும் பணத்தைக் கல்லூரி நிர்வாகம் கொடுக்கவில்லையென்றும், அதனால் மாணவர்கள் படிப்பு நிறுத்தம் செய்திருப்பதும் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. அப்படிப்பட்ட புகார் இருந்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. கந்தப்பன் : தலைவர் அவர்களே, 1960-ம் ஆண்டு மாநில அரசு தமிழைப் பயிற்சிமொழியாக ஏற்றுக்கொள்ளாத தனியார் கல்லூரிகளுக்கு மானியத்தை நிறுத்துவது என்று ஒரு முடிவு எடுத்திருக்கிறார்கள். அந்த முடிவை அரசு இப்போது அமல்படுத்துமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த முடிவு முதலில் எடுக்கப்பட்டது. நடைமுறைப்படுத்துகிற போது, ஏற்படுகின்ற சிக்கல்கள் காரணமாக அதை நிறுத்தி வைத்து, ஆங்காங்கு ஒரு வகுப்பையாவது தமிழில் வைக்க வேண்டுமென்கிற வேண்டுகோள் விடுக்கின்ற நிலைமை இருந்தது. டாக்டர் லட்சுமணசுவாமி முதலியார் கமிட்டி கூட அதைச் சிபாரிசு செய்திருக்கிறது. பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களும் அதைக் ஏற்றுக்கொண்டு எல்லாக் கல்லூரிகளுக்கும் சுற்றறிக்கை

அனுப்பியிருக்கிறார். தென் மாவட்டங்களில் புகுமுக வகுப்பிலே படித்த பிறகு பட்டப் படிப்பையும் தமிழில் பயிற்றுவிக்கத் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

DR. H. V. HANDE : Sir, is it a fact that in several colleges where this incentive scheme has been implemented all colleges in Tamil Nadu—the boys have not received this amount? For instance, in the Pachayappa's College, Kancheepuram the Minister himself has told me that the amount has not been received by the boys. Is it a fact that many students have not received this incentive and if it is so, may I know whether the Government will exercise some control and see why this delay has taken place and whether they will make good this delay?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, கல்லூரி நிர்வாகத்தினருக்குச் சில ஐயப்பாடுகள் ஏற்பட்டதன் காரணமாக இந்தத் தொகையைக் கொடுப்பதில் காலதாமதம் ஏற்பட்டது. இந்த நேரத்தில் மாணவர்களுக்கு அத் தொகை போய்ச் சேர்ந்திருக்கும். உதவித் தொகை கொடுக்கப்படாத நிலைமை எங்கேயாவது இருந்தால், அது அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால், தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோ. இளங்கோவன் : தலைவர் அவர்களே, சிலபல கல்லூரிகளில் மாணவர்கள் தமிழில் பயிற்சி பெற விண்ணப்பித்திருந்தும், அதிக மதிப்பெண் பெற்றிருந்த காரணத்தால் கல்லூரி முதல்வர்கள் அந்த மாணவர்களை ஆங்கிலத்தில் பயிலுமாறு சொல்லப்பட்டிருக்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டு உண்மையா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட புகார் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை.

குலசேகரன் கோட்டையில் பழங்காலச் சிற்பங்கள்

*401 **வினா.—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், T வாடிப்பட்டியை அடுத்துள்ள குலசேகரன்கோட்டை கிராமத்தில் பழங்காலச் சிற்பங்களும், சிலைகளும் புதையுண்டு கிடப்பதாக அரசுக்குத் தகவல் கிடைத்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.